# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2008*, பெப்புருவரி மாதம் *29* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 13.00** **தபாற் செலவு : ரூபா 7.50**

## 2008 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 66/2007

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத் தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தில், அதன் (ஆ) என்னும் பந்தியையும் "பின்போடலாம்." என்னும் சொல்லையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுதவன் மூலம் இத்தாறிருத்தப்படுகின்றது :-

"(ஆ) (i) ஏதேனும் கருத்திட்டத்துக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய உயர்பெறுமதி கொண்ட பொறித்தொகு தியாக, எந்திரத்தொகுதியாக அல்லது சாதனமாக உள்ளவையும் ; அல்லது

(ii) பொருட்காட்சிப் பொருட்களாக அல்லது ஏதேனும் தொழிநுட்ப விளக்கத்தின் பொருட்களாகப் பயன் படுத்தப்படவேண்டிய பண்டங்களாக உள்ளவை யும்,

இலங்கைக்குள் தற்காலிகமாக இறக்குமதி செய்யப்பட்ட வையும், விடயத்துக்கேற்ப, அத்தகைய கருத்திட்டம், பொருட் காட்சி அல்லது விளக்கம் முடிந்தபின்னர் அமைச்சரின் அங்கீகாரத்துடன் மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றவையு மான எவையேனும் பண்டங்கள் மீது, அத்தகைய கருத் திட்டம், பொருட்காட்சி அல்லது விளக்கத் தேதிவரை,

வருமதியான வரிக்கொடுப்பனவைப் பின்போடலாம்.".

2-PL 002808 -1400 (2008/02)

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தாற் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ஆறாம் உட்பிரிவின் (iv) ஆம் உட்பந்தியையும் அவ்வுட் பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரு வதனை இடுவதன் மூலமும் :-

"(iv) விடயத்துக்கேற்ப, (iii) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணப்பட்டியலின் அல் லது சுங்க வெளிப்படுத்துகையின் மீதான உள்ளீட்டு வரி, அத்தகைய வரிப்பணப்பட்டியல் தேதியிலிருந்து அல்லது சுங்க வெளிப் படுத்துகைத் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் முடிவுறுவதன் மேல் அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான வெளியீட்டு வரியிலிருந்து, சொல்லப்பட்ட பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் அவ்வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக் கான விபரத்திரட்டைக் கொடுத்துதவுவதன் மூலம் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட வாறாகக் கழிக்கப்படவில்லையாயின் :

ஆயின், எவ்வாறாயினும், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களும், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (ஊ) என்னும் உட்பந்தியின் (i) ஆம் விடயத்திலும் (ii) ஆம் விடயத்திலும் குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்புகளும் எவ்வாறிருப்பினும், மேற்கூறப்பட்ட விடயங்களில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு அல்லது வேறேதேனும் விசேட கருத்திட்டத்துக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள எவரேனும் பதிவுசெய்யப்பட்ட ஆளுக்கு, கொடுப்பனவானது அரசாங்கத்தினால் பொறுக் கப்படுமிடத்து, அத்தகைய கருத்திட்டங்களுக்குப் பண்டங் களை அல்லது சேவைகளை வழங்குவதுடன் சம்பந்தப் பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் கொள்வனவு மீது உள்ளீட்டு வரி அனுமதிக்கப்படலாம்.".

*(2) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-*

*"ஆயின், மேலும் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (ஊ) என்னும் உட்பந்தியின் (i) ஆம் விடயத்திலும் (ii) ஆம் விடயத்திலும் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு அல்லது வேறேதேனும் விசேட கருத்திட்டத்துக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்ற எவரேனுமாளின் ; அத்துடன் இவ்வுட்பிரிவின் நியதிகளின்படி அனுமதிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரியை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய கருத்திட்டத்தின் இயைபான காலப்பகுதிக்காக வழங்குநர்களின் வழங்கலின் பெறுமதி, வெளியீட்டு வரி எந்த வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலின்மீது கணிப்பீடு செய்யப்படுகின்றதோ அந்த வரி விதிக்கப்படற்பாலதான வழங்கலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

***4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அதன் (ii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது :-*

*"(ii) 2003, யூலை 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2007, திசெம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னர் எவரேனும் ஆளினால் ; அத்துடன்*

*(iii) 2008, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால்,".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

***5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-*

*(1) "2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாளின் குத்தகைக் கையிருப்புகளின் பாகமாகவமைகின்றவொரு சொத்தாகவுள்ள" என்னும் சொற்களுக்கும் எண்களுக்*

கும் பதிலாக, "மேற்கூறப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குத்தகைக்குக் கொடுக்கப்படுகின்றவொரு சொத்தாகவுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இவ்வத்தியாயத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரியைக் கழிக்குமுன்னர் தேறிய இலாபத்தின் அல்லது நட்டத்தின் அடிப்படையில், அத்தகைய நிறுவனத்தின் பெறுமதிச்சேர்ப்பு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஏ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஏ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(4) இவ்வத்தியாயத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோராளும் அல்லது ஒவ்வொரு பங்காண்மையும், இயைபான காலாண்டு முடிவுறுவதனை உடனடுத்துப் பின்வரும் மாதத்தின் இருபதாம் நாளுக்குப் பிந்தாமல், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலானதும் அத்தகைய விபரங்களைக் கொண்டதுமான விபரத்திரட்டொன்றை உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய கொடுப்பனவிலிருந்து அத்தகைய கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்ட வரியின் மூன்றிலொரு பங்கைக் கழித்தல் வேண்டுமென்பதுடன்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய கொடுப்பனவிலிருந்து அத்தகைய கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்ட வரியின்

மூன்றிலொரு பங்கைச் 'சேர்பெறுமதி வரி முற்பணக் கொடுப்பனவாக'க் கழித்தல் வேண்டுமென்பதுடன்," என்னும் சொற்களை இடுதவன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"சேர்பெறுமதி வரி முற்பணக் கொடுப்பனவுகளைக் கழித்தல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"தவணை தவறிய வரியை அறவிடுவதற்கான கால எல்லை.*

48அ. ஆணையாளர் தலைமையதிபதி, இறுக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தவணை தவறிய வரி 37 ஆம் பிரிவின்கீழ் எந்த வரிமதிப்பீட்டின்மூலம் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில் இறுதியானதாகவும் முடிவானதாகவும் வருகின்றதோ அந்த வரிமதிப்பீட்டிலிருந்து மூன்று மாதங்கள் பூர்த்தி செய்யப்பட்டதிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதி யொன்று கழிந்துள்ளவிடத்து, அத்தகைய வரியை அறவிடுவதற்காக, இச்சட்டத்தின் 42, 43, 44 அல் லது 48 என்னும் பிரிவுகளின் கீழ் ஏதேனும் வழக்கு நடவடிக்கையைத் தொடங்குதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் II ஆம் பாகத்தில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

"(1) அப்பாகத்தின் (அ) என்னும் பந்தியில் -

(அ) (iv) ஆம் விடயத்தில், "தங்க நாணயங்கள் மற்றும் பொறித் தொகுதி அல்லது உபகரணம் எதனினதும் தற்காலிக இறக்குமதி அல்லது பொருட்காட்சிப் பொருட்களாகப் பயன்படுத்தப்படவேண்டிய அல்லது ஏதேனும் தொழிநுட்ப விளக்கப் பொருட்களாகப் பயன்படுத்தப் படவேண்டியவையும் இறக்குமதித் தேதியி

லிருந்து பன்னிரெண்டு மாதங்களினுள் மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றவையுமான எவையேனும் பண்டங்கள் ;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தங்க நாணயங்கள் (2007.07.17 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ; " என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) (xii) ஆம் விடயத்தில், "கைத்தறித் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் நூலிழையும் சாயங்களும் மற்றும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின்கீழ் அடையாளங் காணப்பட்டவாறு, அத்துடன் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) புடவைத் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் நூலிழையும் கைத்தறித் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் சாயங்களும் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில் -

(அ) அதன் (i)(அ) என்னும் விடயத்தில், "பாடசாலையொன்றினால் அல்லது (2004 யூலை 1ஆம் தேதியிலிருந்து பயனுறும்)" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பாடசாலையொன்றினால் அல்லது (2006.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ஆ) (xii)ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(xii) மருத்துவ நிறுவனங்களினால் அல்லது அத்தகைய கவனிப்பை வழங்குகின்ற உயர்தொழில்ரீதியில் தகைமை பெற்ற ஆட்களினால் வழங்கப்பட்ட

எல்லாச் சுகாதாரக் கவனிப்புச் சேவைகளும் (2007.07.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;";

(இ) (xxi) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(xxii) களிமண் கூரை ஓடுகள் அல்லது இரசாயன நப்தா இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அளவுக்கு, அத்தகைய களிமண் கூரை ஓடுகள் (2007.07.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) அல்லது இரசாயன நப்தா (2007.07.17) ;

(xxiii) சேர்பெறுமதி வரி, 2007.07.01 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் சோகரிக்கப்படாதுள்ளவிடத்து அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்துக்குச் செலுத்தப்படாதுள்ளவிடத்து, பதனிடப்படாத கமத்தொழில், தோட்ட வேளாண்மை அல்லது மீன்பிடி உற்பத்திப் பொருட்களின் உள்ளூர் வழங்கலுட்பட, இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பதனிடப்படாத கமத்தொழில் தோட்ட வேளாண்மை அல்லது மீன்பிடி உற்பத்திப் பொருட்கள் ;

(xxiv) 2004, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) சேர்பெறுமதி வரி சேகரிக்கப்பட்டு உண்ணாட்டரசிறைத் திணைக்களத்துக்குச் செலுத்தப்படாதுள்ளவிடத்து, பதனிடப்படாத இறால்களின் உள்ளூர் வழங்கலுட்பட, இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பதனிடப்படாத இறால்கள் ;

(xxv) இறக்குமதி செய்யப்பட்ட பிரம்புகள் (2007.07.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;

(xxvi) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பசும்பால் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அளவுவரை அத்தகைய பாலிலிருந்து உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பாலுற்பத்திப் பொருட்களும், இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசையைக் கொண்டுள்ள உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி உற்பத்திப் பொருட்களும் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ; அத்துடன்

(xxvii) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட சீனி (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).";

(3) அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில், (xviii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(xix) (அ) ஏதேனும் கருத்திட்டத்துக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய உயர் பெறுமதி கொண்ட பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது சாதனம்; அல்லது

(ஆ) பொருட்காட்சிப் பொருட்களாக அல்லது ஏதேனும் தொழினுட்ப விளக்கப் பொருட்களாகப் பயன்படுத்தப்படவேண்டிய பண்டங்கள்,

அத்துடன் இவை, விடயத்துக்கேற்ப, அத்தகைய கருத்திட்டம், பொருட்காட்சி அல்லது விளக்கம் முடிந்த பின்னர் மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவென்பதுடன், இவை தொடர்பில் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாவது காப்புவாசகத்தின் (ஆ) என்னும்

*பந்தியின் நியதிகளின்படி வரி பின்போடவும் படுகின்றது (2007.07.17 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;*

(xx) *சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்படும் இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரணம் மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின்கீழ் அடையாளங் காணப்பட்ட வானூர்தி என்ஜின்கள் அல்லது வானூர்தி உதிரிப்பாகங்கள் (2007.07.17 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;*

(xxi) *எச்எஸ் கோவை இல. 1401.20 இன் கீழான பிரம்புகள் (2007.07.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;*

(xxii) *2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 24இ என்னும் பிரிவின்கீழ் வரி விடுமுறையொன்றுக்குத் தகைமையுள்ள பொறுப்பு முயற்சியொன்றினால் உற்பத்தி செய்யும் நோக்கத்துக்காக அல்லது சேவைகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கென அத்தகைய பொறுப்பு முயற்சியினாலான பொறித்தொகுதியும் எந்திரத்தொகுதியும் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;*

(xxiii) *நிதியமைச்சரின் அங்கீகாரத்துடன் (ஊ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கான அல்லது குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான பண்டங்கள்." ;*

(4) அப்பாகத்தின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :-

“(ஊ) பின்வருவனவற்றை வழங்குதல் :-

(i) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் நியதிகளின்படி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றாக அடையாளங்காணப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்துக்கான பண்டங்கள் அல்லது சேவைகள்(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்); அல்லது

(ii) இக்கருத்திட்டத்தின் மீதான வரி அரசாங்கத்தினால் பொறுக்கப்படுகின்றதும், நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட்கொண்டு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அடையாங்காணப்பட்டதுமான ஏதேனும் கருத்திட்டத்துக்கான பண்டங்கள் அல்லது சேவைகள் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ; அல்லது

(iii) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தினாலான பண்டங்கள் அல்லது சேவைகள் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).”.

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :-

**" மூன்றாம் அட்டவணை**

*அடிப்படை வீதம்*

*(அ)* *பின்வருவனவற்றை வழங்குதல் அல்லது இறக்குமதி செய்தல் :-*

(i) *2007 திசெம்பர் 31 வரைக்கும் சீனி ;*

(ii) *பருப்பு ;*

(iii) *2007 யூன் 30 வரைக்கும் உருளைக்கிழங்கு ;*

(iv) *2007 யூன் 30 வரைக்கும் வெங்காயம் ;*

(v) *மீன் கருவாடு ;*

(vi) *மிளகாய் ;*

(vii) *சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அடையாளங் காணப்பட்ட உயர் தொழினுட்ப மருத்துவச் சாதனங்கள் அல்லது சீட்டு வழங்கும் எந்திரத் தொகுதியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் எந்திரத் தொகுதி ;*

(viii) *நகைகள் ;*

[*இவ்வட்டவணையின்* (i) *ஆம்,* (ii) *ஆம் விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களின் இறக்குமதி அல்லது வழங்குகை, எல்லா நோக்கங்களுக்காகவும் 2004, ஒற்றோபர் 1 ஆம் தேதியிலிருந்து 2004, நவெம்பர் 18 ஆம் தேதிவரை சேர்பெறுமதி வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.*]

(ஆ) பின்வருவனவற்றை இறக்குமதி செய்தல் :-

(i) தேசிய திரைப்படக்கூட்டுத்தாபன தவிசாளரின் அங்கீகாரத்துடன் சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின்கீழ் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் அடையாளங்காணப்படும், வெளிக்காட்டப்பட்ட அல்லது உருவிளக்கப்படுத்தப்பட்ட சினே திரைப்படங்களும், காந்த சினே ஒலிப்பதிவுக் கருவிகளும், திரைப்படம்சார் படம்பிடிக்கும் கருவிகளும், படங்காட்டு கருவிகளும், பாகங்களும் துணைப்பொருட்களும், திரைப்படம்சார் ஆய்வுகூடங்களுக்கான உபகரணங்களும் சாதனங்களும், மின்சார மின்னிழைகளும் அல்லது மின்வெளியேற்று விளக்குகளும் வில் விளக்குக் கார்பனும் ;

(ii) சீனி (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);

(iii) தகரத்திலடைக்கப்பட்ட மீன், சணகம், பாசிப் பயறு (2007.06.05 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) ;

(iv) உருளைக்கிழங்கு (2007 யூலை 1 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).".

(v) வெங்காயம் (2007 யூலை 1 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).".

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**11.** (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 2007 யூலை 17 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(2) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவுக்கும் (10) ஆம் உட்பிரிவுக்கும் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 2008 சனவரி 1ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(3) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஏ என்னும் பிரிவுக்குச் செய்யப் பட்ட திருத்தம் (புதிய (4) ஆம் உட்பிரிவைச் சேர்த்தல்), எல்லா நோக்கங்களுக்காகவும் 2007, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(4) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக் கங்களுக்காகவும் 2008, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(5) இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் (பிரிவை மாற்றீடு செய்தல்), எல்லா நோக்கங்களுக்காகவும் 2006, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப் படுதல் வேண்டும்.".

*நட்டோத்தரவாதம்.*

**12.** இரண்டாயிரத்து ஏழாமாண்டு யூலை 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியைச் சேகரிக்கும் எவரேனுமாள், உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பு செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும், செய்யப்படுகின்றதாகவும் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகயை ஆள், அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்கவும்படுகின்றார்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்